**இந்து கலாசார நிதியம் - 2017**

-----------------------------------------------------

இந்து கலாசார நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, பெறுவனவுகள் கொடுப்பனவுக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதியத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த கூறிய நிதிக்கூற்றுக்கள் மீது எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்து கலாசார நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2006 திசெம்பர் 22 திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ) பந்தியின் பிரகாரம் பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,586,304 மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,428,489 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,157,815 அதிகரிப்பொன்றாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக காணிக்கை பணம் சேகரிக்கும் செயற்திட்டத்தின் வருமானம் ரூபா 4,062,111 ஆலும் நிகழ்ச்சிதிட்டங்களை நடாத்தியதன் மூலம் ரூபா 1,803,090 ஆன தேறிய வருமானம் உழைத்திருந்தன. மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுவற்காக தேவையான நிதியங்களை சேகரிப்பதற்கு 2 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிலிருந்தும் நிலையான வைப்புக்களின் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,969,731 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 6,778,434 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தாத அளவு ரூபா 6,191,297 அதாவது சேகரிப்பட்ட வருமானத்தில் 48 சதவீதமாக இருந்தது.

(ஆ) இந்து மக்களுக்காக சமய புத்தகங்களும், ‘‘அறநெறி’’ பாடசாலை பிள்ளைகளுக்கு துணை நூல்களை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,319,750 இற்கு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அப் புத்தக இருப்பில் ரூபா 830,162 பெறுமதிக் கிரயமான புத்தகங்கள் கணக்காய்வு சந்தர்ப்பம் 2018 மே மாதம் வரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 2,200,000 தொகை செலவிடப்பட்டு 2000 சேலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 1,430,000 கிரயமான 1300 சேலைகள் கணக்காய்வு சந்தர்ப்பமான 2018 மே மாதம் வரிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீருடைகள் மற்றும் புத்தகங்கள் உரிய காலப்பகுதிக்குள் உரிய நபர்களுக்கு பகிர்ந்தளிக்காமை. |
| (ஆ) | பாதீடு | நிதியத்தின் வருமானங்கள் மற்றும் செயலவினங்கள் நியாயமாக எதிர்வுகூறி பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |